## இந்த நிகழ்ச்சியின் பயன்கள்

- நிதியியல் / நிர்வாகயியல் திறமைகளை மேம்படுத்திக்கொள்ளலாம்
- வர்த்தகத்தை நிபுணத்துவம் மிக்க முறையில் கையாள்வதற்கான நுட்பங்களை நன்றாக அறிந்துகொள்ளலாம்
- இந்திய அரசு, இந்திய ரிசர்வ் வங்கி ஆகியவற்றின் புதிய முன்முயற்சிகளைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ள வாய்ப்பு
- வங்கி வழங்கும் MSME கடன்கள் பற்றியும் கிரெடிட் ரேட்டிங் இடர்பாடுகள் மேலாண்மை பற்றியும் நன்கு புரிந்துகொள்ளலாம்

## பயிற்சி நிகழ்வு கட்டணம்

பூர்ணதா நிறுவனத்திற்கு ஒரு நபருக்கான வணிக வழிகாட்டல் திட்ட பயிற்சி கட்டணமாக இந்தியன் வங்கி ரூபாய் 5000/-செலுத்தினாலும், SC/ST மற்றும் மகளிர் அல்லாதார் தொழில் முனைவோருக்கு சலுகை கட்டணமாக Rs. 2000/- 18% GST சேர்த்து Rs. 2360/- ஆக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

SC/ ST மற்றும் மகளிர் தொழில் முனைவோருக்கு கட்டணம் எதுவும் இல்லை.

## சான்றிதழ்

- ஆன்லைன் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் இந்தியன் வங்கி, பூர்ணதா கோ மற்றும் USA-ன் MADE ஆகியவை இணைந்து வழங்கும் சான்றிதழ் வழங்கப்படும்.


**கார்ப்பரேட் அலுவலகம் :**
254-260, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.
**Visit us at:** www.indianbank.in
வாடிக்கையாளர் சேவை எண். 1800 425 00 000 | 1800 572 20 00
Follow us on:


इंडियन बैंक Indian Bank
इलाहाबाद ALLAHABAD

इंडियन बैंक Indian Bank
इलाहाबाद ALLAHABAD

# MSME ப்ரேரணா
# குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான ஆன்லைன் பயிற்சி நிகழ்வு

(குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான வர்த்தக மேம்பாட்டு நிகழ்வு)

## மாநில மொழியில் ஆன்லைன் பயிலரங்கம்



கூட்டாக இணைந்து

poornatha

# பின்னணி

நாட்டின் வளர்ச்சியில் மிகவும் உறுதுணையாக இருப்பதோடு மட்டுமில்லாமல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 சதவீதமும் மொத்த ஏற்றுமதியில் 40% சதவீதமும் பங்களித்து வரும் மிகவும் முக்கியமான துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை ஆகும். இத்துறை சுமார் 12 கோடி இந்திய மக்களுக்கு வேலை வாய்ப்பு நல்கியுள்ளது.

நெருக்கடி காலத்தில் இத்துறைதான் அதிக பாதிப்புக்குள்ளாகிறது. தற்போதைய சூழலில் , இத்துறையில், உற்பத்தி, பட்டுவாடா, வரவேண்டிய வரவுகள், கொடுக்கவேண்டிய செலவினங்கள் ஆகியவை பெரும் பாதிப்புக்குள்ளாகி இத்துறையைச் சார்ந்தோர் பெரும் இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

இந்த நெருக்கடியான சூழலை எதிர்கொள்ள, இந்திய அரசும், பாரத ரிசர்வ் வங்கியும், இத்துறையை சார்ந்தோருக்கு நிதி ஊக்கத்தையும், கொள்கை வரைமுறைகளை நெறிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

நிதியைப் பொருத்தவரையில் இத்துறையைச் சார்ந்தோருக்கு கோவிட்-19 கடன் உதவிகளை வழங்குவதோடு மட்டுமில்லாமல் நடப்பு மூலதனத்தை மறுமதிப்பீடு செய்து கடன் வழங்குவதிலும் முதன்மையான பணியினை இந்தியன் வங்கி செய்து வ,ருகிறது. பிரதர மந்திரி ஆத்ம நிர்பர் திட்டத்தின் கீழும் இந்தியன் வங்கி சீரிய பணியாற்றி வருகிறது.

நிதி ஆதாரம் ஒருபுறம் இருக்க, சவால்களை சந்திக்க ஏதுவாக, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் தங்களின் திறமைகளை மேம்படுத்திக் கொள்வதற்காக ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தையும் ஆயத்தப்படுத்துவது ஆகியவை பற்றி புரியவைப்பது.

poornatha

பூர்ணதா அன் கோ என்பது மதுரையில் அமையப்பெற்றுள்ள தொழில்முனைவோர் உருவாக்கும் நிறுவனமாகும். பூர்ணதாவின் பயணம், தொழில் முனைவோருக்கான தலைமை உருவாக்க நிகழ்வான பயணத்தில் மகிழ்ச்சி என்கிற பயிற்சி நிகழ்வுடன் தொடங்கியது. இந்த அமைப்பு, புதிய பொருளாதார சூழலில். தொழில் முனைவோரை உருவாக்கும் அமெரிக்காவில் உள்ள MADE என்ற அமைப்புடன் தொடர்புடையது.

# நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்

கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி இந்த நிகழ்ச்சியில், நிர்வாகவியல், நிதியியல் மற்றும் வங்கியியல் சார்ந்த அம்சங்கள் விளக்கப்படும்.

**(I) நிர்வாகவியல்**

1. சீரான முறையில் முடிவெடுக்க வேண்டிய அம்சங்கள்-இதில் மனித வளம் மற்றும் தலைமைப் பண்பு அடங்கும்
2. திடமான நம்பிக்கை உருவாக்கிக் கொள்ளுதல் மற்றும் தகவல்தொடர்பு திறமைகளைப் பெருக்கிக்கொள்ளுதல்
3. மிகவும் ஸ்திரமற்ற, சிக்கல்கள் நிறைந்த சந்தேகமான சூழ்நிலைகளிலும் (VUCA) ஈடுகொடுத்து நிற்பது மற்றும் நெருக்கடியான தருணங்களை கையாளுதல்

**(II) நிதியியல்**

நிதிநிலை அறிக்கை (BALANCE SHEET) கேஷ் ப்ளோ மற்றும் நிதியியல் பரிவர்த்தனைகளைக் கணக்கீடு செய்தல் ஆகியவற்றின் அடிப்படை கருத்தாக்கங்களைப் புரிய வைத்தல்

**(III) வங்கியியல் தொடர்பானவை**

1. இந்திய அரசு / இந்திய ரிசர்வ் வங்கி / வங்கிகள் ஆகியவற்றால் அளிக்கப்படும் பல்வேறு ஊக்கத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
2. பல்வேறு கிரெடிட் வசதிகள் மற்றும் அவற்றின் மதிப்பீடு, கிரெடிட் ரேட்டிங்-ன் முக்கியத்துவம்
3. Udayami Mitra, GST, Trade, psbloans உள்ளிட்ட பல்வேறு வலைதளங்கள் பற்றிய விளக்கங்கள்

# கால அளவு

- Webex/ MS Teams மூலமாக ஒவ்வொன்றும் 1 மணி நேரம் 15 நிமிடம் கொண்ட 12 வகுப்புகள்

# பயிற்சி வழிமுறை

- Polls, break out rooms, பிற இணைய வழி கருவிகள் மூலமாக ஆன்லைன் இணையவழி கருத்து பரிமாற்ற அமர்வுகள்
- நிர்வாகவியல் மற்றும் நிதியியல் திறமைகள் சார்ந்த வகுப்புகளில் பூர்ணதாவின் வல்லுநர்கள் விளக்க உரை வழங்குவார்கள். வங்கியியல் சார்ந்த தலைப்புகளில் இந்தியன் வங்கியைச் சார்ந்த அதிகாரிகள் பயிற்சி அளிப்பர்.